2011 செப்டம்பர் 8]

98—

புனரமைத்தல்

***584—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலத்திலுள்ள பெருமாள் கோயிலைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அருள்மிகு இலட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சேந்தமங்கலம் அருள்மிகு நைனாமலை வரதராஜப் பெருமாள் திருக்கோயிலின் உபகோயிலாகும். நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட இத்திருக்கோயிலில் 1985 ஆம் ஆண்டு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. இத்திருக்கோயிலில் மூலவர் சன்னதி, தாயார் சன்னதி புனரமைத்தல், இராஜகோபுரம் மற்றும் இதர சன்னதிகளின் விமானங்களையும் பராமரிப்புச் செய்து வர்ணம் பூசும் பணிகளை மேற்கொள்ள உத்தேசமாக ரூ.25.00 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணிகளை மேற்கொள்ள திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லை. திருப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் பங்களிப்பு கணிசமாகக் கிடைக்கப்பெறும் நிலையில், திருப்பணியில் பொதுமக்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அறநிலையத் துறையின் நிதியுதவியும் அளித்து பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தீர்த்தமலை தீர்த்தகிரீஸ்வரர் கோயில் மிகவும் பிரசித்திப் பெற்ற கோயிலாகும். 100, 150 ஆண்டுக் காலமாக இருக்கக்கூடிய கோயில். ஆடி மாதத்திலே, பெங்களூரு போன்ற பல்வேறுபட்ட பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்ற கோயிலுக்குப் புனரமைப்புப் பணிகள் செய்ய வேண்டுமென்று கடந்த ஐந்தாண்டுக் கால தி.மு.க ஆட்சியில் பலமுறை நான் வலியுறுத்தியிருக்கிறேன்; கிடைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேகூட மகஜர் கொடுத்திருக்கிறேன். அந்தப் பகுதிக்கு வரக்கூடிய பக்தர்களுக்கு உணவு அருந்துவதற்குக்கூட ஓர் இடமில்லை. அதனைக் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டப் பேரவைத் தொகுதி, திருமணஞ்சேரியில் மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ சுகந்த பரிமளேஸ்வரர் ஆலயம் சீரமைக்கப்படாமல் இருக்கிறது. அது இந்த ஆண்டிற்கான சீரமைக்கும் பணியில் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஸ்ரீ சுகந்த பரிமளேஸ்வரர்ஆலயத்தினைச் சீரமைப்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.